2018 ஜூன் 27]

227—

வனவியல் கல்லூரி

***28629—திரு. என். சுரேஷ் ராஜன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகர்கோவில் தொகுதியில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்மூலம் வனவியல் கல்லூரி துவக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு, வேளாண்மைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

நாகர்கோவில் தொகுதியில் வேளாண்மைப் பல்கலைக்கழகம்மூலம் வனவியல் கல்லூரி அமைக்க கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. என். சுரேஷ் ராஜன் அவர்கள்.*

முற்பகல் 10-30

திரு. என். சுரேஷ் ராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகர்கோவில் தொகுதியில் விவசாயக் கல்லூரி வேண்டும் என்றுதான் நான் கேள்வி கேட்டிருந்தேன். இருந்தாலும் பரவாயில்லை. எங்களுடைய மாவட்டத்தைப் பொறுத்தவரையில் விவசாயம் நிறைந்த மாவட்டம். எல்லா வகையான விவசாயப் பயிர்களும் உற்பத்தியாகக்கூடிய மாவட்டம். குறிப்பாக உலகிலேயே முதல் தரம் வாய்ந்த இரப்பர் உற்பத்தியாகக்கூடிய மாவட்டம். படித்த மாணவர்களை உள்ளடக்கிய மாவட்டம். இப்போது பல இளைஞர்கள் விவசாயக் கல்லூரிகளில் படிக்க வேண்டுமென்றால், வெளி மாவட்டங்களுக்குச் சென்று அங்கே தங்கிப் படிக்கக்கூடிய ஒரு நிலை இருந்துவருகிறது. எனவே, இந்த அரசாங்கம் மறுபரிசீலனை செய்து கன்னியாகுமரி மாவட்டத்தில் விவசாயக் கல்லூரியைக் கொண்டுவரும் முயற்சிகளை மேற்கொள்ளுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கவனத்திற்கு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின்கீழ் 14 உறுப்புக் கல்லூரிகளும், 27 இணைப்புக் கல்லூரிகளும் இயங்கிவருகின்றன. அவற்றில் முதுநிலை பட்டப் படிப்புடன் 13 இளநிலை பட்டப் படிப்புகளும் வழங்கப்பட்டு வருகின்றன. இக்கல்லூரிகளில் தேவையான அளவு இடங்கள் ஒதுக்கப்பட்டு, மாணவர்கள் படித்துவருகின்றனர். புதிதாக ஒரு கல்லூரி ஏற்படுத்த வேண்டுமென்றால், குறைந்தபட்சம் 110 ஏக்கர் நிலமும், அதற்கேற்ப தொழில்நுட்பம், ஆராய்ச்சி மற்றும் அமைச்சுப் பணிகளுக்குத் தேவையான மனித ஆற்றல் அனைத்தும் தேவைப்படுகின்றன. மேலும், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின்கீழ் மேட்டுப்பாளையத்தில் வனவியல் கல்லூரி செயல்பட்டுவருகிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில் பேச்சிப்பாறையில் தோட்டக்கலை பட்டப் படிப்பு நிறுவனம், தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம், திருப்பதிசாரத்தில் நெல் ஆராய்ச்சி நிலையம், தோவாளையில் மலர் ஆராய்ச்சி நிலையம் ஆகியவை செயல்பட்டுவருகின்றன. கன்னியாகுமரி மாவட்ட விவசாயிகள் மற்றும் மாணவர்கள் மேற்கண்ட ஆராய்ச்சி நிலையங்களில் சேர்ந்து, ஆலோசனைகள் பெற்று பயனடையலாம். எனவே, நாகர்கோவில் தொகுதியில் வேளாண்மைப் பல்கலைக்கழகம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் ஏதும் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என். சுரேஷ் ராஜன் அவர்கள்.

திரு. என். சுரேஷ் ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் மாணவர்கள் அதிக தூரத்திலுள்ள மேட்டுப்பாளையம் சென்று படிக்கக்கூடிய வாய்ப்பு இல்லை. பொருளாதாரத்தைப் பொறுத்தமட்டில் நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள்தான் அதிகமாக இருக்கிறார்கள். மேலும், அதிகமான இளைஞர்கள் அங்கே இருக்கிறார்கள். தோட்டக்கலை ஆராய்ச்சி மையம் எல்லாம் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில், கலைஞர் ஆட்சிக் காலத்தில் உருவாக்கப்பட்டவை. இதுபோன்ற ஆராய்ச்சி மையங்கள் மூலமாகப் படிக்கக்கூடிய உணர்வுகள்

2018 ஜூன் 27]

கலைஞருடைய ஆட்சியில் உருவாக்கப்பட்டவை. ஆனால், மேற்படிப்பு படிக்கவேண்டுமென்றால் மேட்டுப்பாளையம் அல்லது நீண்டதூரம் செல்லவேண்டிய நிலை இருக்கிறது. அதிகமான இளைஞர்கள் இருக்கின்ற காரணத்தினால் அரசாங்கம் மீண்டும் இதனை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய வினாவிற்கு பதிலளிப்பதற்கு முன்பாக, இன்றைக்கு புரட்சித் தலைவி அம்மாவிற்குப் பிறகு நம்முடைய முதல்வர் அவர்கள் புதிதாக 2 தனியார் வேளாண்மைக் கல்லூரிகளை அறிவித்து, அதற்கான உத்தரவினை அளித்துள்ளார்கள். இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் 3 அரசு வேளாண்மைக் கல்லூரிகள் தமிழகத்திலே ஆரம்பிக்கப்பட்டு, செயல்பட்டுவருகின்றன. மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை ஏற்று, தேவைப்படுமாயின் அதிகாரிகள்மூலம் ஆய்வு செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.பெ. கிரி அவர்கள்.*

திரு. மு.பெ. கிரி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கம் தொகுதி, மேல்செங்கம் ஊராட்சியில் சுமார் 12 ஆயிரம் ஏக்கர் அரசு விவசாயப் பண்ணை நிலம் இருக்கிறது. நான் இந்த மன்றத்தில் 3-வது ஆண்டாகத் தொடர்ந்து கேள்வி எழுப்பிக்கொண்டிருக்கின்றேன். அங்கே நீலகிரி மரங்களெல்லாம் வியாபார நோக்கத்திலே நடப்படுவதால் நிலத்தடி நீர் பெருமளவுக்குப் பாதிக்கப்பட்டு, வறட்சி ஏற்படுகின்ற அளவுக்கு எங்கள் செங்கம் தொகுதியே பாதிக்கப்பட்டிருக்கிறது. எனவே, அந்த இடத்தைப் பயன்படுத்தி வேளாண்மைத் துறையின் சார்பில் புதிய ஒரு பல்கலைக்கழகம் அமைக்க வேண்டும். மறைந்த முதல்வர் அம்மையார் அவர்கள் இயற்கை வேளாண்மை விவசாயி நம்மாழ்வார் பெயரில், இயற்கை வேளாண்மை ஆராய்ச்சி மையம் அமைப்போம் என்று அறிவித்ததற்கிணங்க, அதையாவது அல்லது வனவியல் கல்லூரியையாவது அமைக்க வேண்டும். அங்கு போதுமான அளவுக்கு 14 இராட்சதக் கிணறுகள் இருக்கின்றன.*

[2018 ஜூன் 27

140 ஆண்டுக்கால வறட்சியில்கூட அந்தக் கிணறுகளெல்லாம் வற்றவே இல்லை. அந்த அளவுக்கு இருந்த இடம் இப்பொழுது பாழ்பட்டுக் கிடக்கிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கே ஏதாவது ஒரு கல்லூரியை அல்லது ஆராய்ச்சி நிறுவனத்தை உருவாக்கித்தர முன்வருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லிய மேல்செங்கம் பகுதியில் இருக்கின்ற அந்த நிலம் மத்திய அரசுக்குச் சொந்தமானது, தமிழக அரசுக்குச் சொந்தமானதல்ல. 30 வருடங்கள் குத்தகைக்கு எடுத்து, அதில் ஆராய்ச்சி நிலையம் நடத்திவந்தோம். அந்தக் காலக்கெடு முடிந்தவுடன் ஒப்படைத்துவிட்டோம். தற்போது வனத் துறை அதை எடுத்துச் செயல்படுத்திவருகிறது. வனத் துறையிடம் அந்த நிலம் இப்போது இருக்கிறது. வேண்டுமென்றால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதை மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்தில் தெரிவித்து, தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 10-35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 228, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. வரலட்சுமி, மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

228—

படகுக் குழாம்

***5844—திருமதி ம. வரலட்சுமி:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல்பட்டு தொகுதியில் உள்ள புளிப்பாக்கம் கொளவாய் ஏரியில் படகுக் குழாம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?